## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.** 65/23

வாக்குமூலம்..வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமச்சந்திரன் | தொழில் | |
| த/பெ. | ஆறுமுகம் சேர்வை | வயது | 95 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 04.04.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கின் வாதி. வாதி தரப்பின் 1-வது சாட்சி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். 01.09.2017-ம் தேதிய ஒ.மு. 2868/2017 அ 6 ன் படி அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியரின் செயல் முறை ஆணை சார்வு செய்யப்பட்ட அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ. 1 குறியீடு செய்யப்படுகிறது. 01.03.2023-ம் தேதிய நி,மு. 17200/2017 D 5 ன் படி புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலுவலரின் செயல் முறை ஆணை சார்வு செய்யப்பட்ட அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ. 2 குறியீடு செய்யப்படுகிறது. புல எண். 150 க்கான புல வரைபடம் கணிணி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ. 3 குறியீடு செய்யப்படுகிறது. புல எண். 151 க்கான புல வரைபடம் கணிணி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ. 4 குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள புல எண்களுக்கான பட்டா எண். 1227 ன் படியான கணிணி சிட்டா கணிணி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ. 5 குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள வேறு நபர்களுக்கு சொந்தமான புல எண்களுக்கான கூட்டு பட்டா எண். 1519 ன் படியான கணிணி சிட்டா கணிணி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ. 6 குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள மகாலிங்கத்திற்கு சொந்தமான புல எண்களுக்கான கூட்டு பட்டா எண். 2101 ன் படியான கணிணி சிட்டா கணிணி பதிவிறக்க நகல் தாக்கல்

செய்கிறேன். அது வா.சா.ஆ. 7 குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள ஷேக் சரினா பீவிக்கு சொந்தமான புல எண்ணுக்கான பட்டா எண். 7688 ன் படியான கணிணி சிட்டா கணிணி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ. 8 குறியீடு செய்யப்படுகிறது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் இருக்கும் இடம் புறம்போக்கு இடம் அதற்கு பட்டா எனக்கு வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலம் மற்றும் வழக்குரையில் வழக்கு சொத்து உள்ள இடம் செட்டில்மெண்ட் காலத்தில் லோக்கல் பண்ட் ரோடு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து தற்போது அரசிற்கு சொந்தம் என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது ஆனால் எனக்கு சொந்தம்.

2. வழக்கு சொத்து வகைப்பாட்டை எதிர்த்தும், பட்டா கோரியும், நான் வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்த மேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து நான் மாவட்ட வருவாய் அலுவலரிடம் செய்த மேல் முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.மேற்படி 2 மேல் முறையீடும் மாண்மிகு உயர் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த நீதி பேராணையின் அடிப்படையில் தான் நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா வழக்கை தவிர தாவா சொத்து சம்மந்தமாக நிலவரித் திட்ட இயக்குநரிடம் மேல் முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். நிலவரித் திட்ட இயக்குநரை நான் தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்தை சுற்றிலும் எனக்கு சொந்தமான சொத்துகள் இருப்பதை வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும் அதன் அடிப்படையில் வழக்கு சொத்து எனக்கு சொந்தமானது என்பது நிரூபணம் ஆகாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் புலப்படத்தில் கண்டபடி நாளது தேதி வரை பாதை உள்ளது என்றால் சரியல்ல. அதனால் வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.